# Deposition of Witness

In the Court of the Principal District Judge, Vellore District.
S.C.No.135 of 2025
Prosecution Witness No.P.W.1 (L.W.1)

| | |
|---|---|
| Name | **மணிகண்டன்** |
| Father/Husband Name | அண்ணாமலை |
| Calling/Occupation | PC 1178 |
| Age | 34 |
| Address | நாகநதி |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 17.03.2026.

(Accused Present)

**முதல் விசாரணை**

நான் தற்போது அணைக்கட்டு காவல் நிலையத்தில் முதல் நிலை காவலராக பணியாற்றி வருகிறேன். கடந்த 27.06.2024 அன்று காலை 06.00 மணி அளவில் அல்லேரி மலையில் மது விலக்கு சம்பந்தமாக கண்காணித்துக்கொண்டு உதவி ஆய்வாளர் லெனின் மற்றும் சந்தோஷ்குமார், நான் ஆகியோர் சென்றோம். அவுசேரி ஓடை அருகில் சென்றபோது எதிரில் ஒருவர் வந்தார். எங்களை பார்த்ததும் அவர் அப்படியே நின்றுவிட்டார். அவரை பிடிக்க சென்றபோது அவர்

ஓடினார். நாங்கள் அவரை ஓடி மடக்கி பிடித்தோம். அவர் இருந்த இடத்தில் மூன்று லாரி டியூப்களில் சாராயம் இருந்தது. ஒரு டியூப்பில் 30 லிட்டர் வீதம் மொத்தம் 120 லிட்டர் சாராயம் இருந்தது. உதவி ஆய்வாளர் எதிரியுடன் பேசிக்கொண்டிருந்தார், விசாரித்தார். அவரின் ஊர் அல்லேரி என்று சொன்னார். அவரின் பெயர் பிரபு என்று சொன்னார். ஆஜர் எதிரிதான் அவர்.

எதிரியை விசாரித்த பிறகு அந்த இடத்தில் சாராயம் இருந்தது. இரண்டு கண்ணாடி பாட்டில்களில் விஷ சாராயமா என்று பரிசோதனை செய்ய 750 மி.லி. சாராயம் எடுத்துக்கொண்டார். மகசர் தயார் செய்யப்பட்டது. அழித்தல் மகசர் மற்றும் கைப்பற்றுதல் மகசரும் தயாரிக்கப்பட்டது. இரண்டு பாட்டில்களில் இருந்த சாராயத்தை தவிர மீதம் அங்கேயே கொட்டி அழிக்கப்பட்டது. கைப்பற்றுதல் மகசர் மற்றும் அழித்தல் மகசரில் நான் கையொப்பம் செய்தேன். ஒப்புதல் வாக்குமூலத்தில் கையொப்பம் போட்டேனா என்று நினைவில்லை.

என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். முதல் கையொப்பம் காவலர் சந்தோஷ்குமார் என்பவரினுடையது. பின்னர் சம்பவ இடத்தில் தயாரிக்கப்பட்ட கைப்பற்றுதல் மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். அழித்தல் மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். **கைப்பற்றுதல் மகசர் அ.த.சா.ஆ.1. அழித்தல் மகசர் அ.த.சா.ஆ.2** ஆகும்.

ஆய்வாளர் என்னை விசாரித்தார். என்னிடம் காண்பிக்கப்படும் இரண்டு கண்ணாடி பாட்டில்களில் தான் சாராயம் மாதிரிக்காக எடுக்கப்பட்டது. அந்த இரண்டு பாட்டில்கள் முறையே **சா.பொ.1 மற்றும் சா.பொ.2** ஆகும்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரியை கைது செய்ததாக சொல்லப்படும் அவுசாரி ஓடை சுமார் 3–5 கி.மீ தூரம் உள்ளது என்றால் சரிதான். அந்த ஓடையில் எந்த இடத்தில் குறிப்பாக எதிரியை பிடித்தோம் என்றால் தெரியாது. அவுசாரி ஓடையில் வாகனம் செல்ல முடியாது. ரோந்து பணிக்காக மொத்தம் மூன்று பேர் சென்றோம். ரோந்து பணிக்கு சென்றதாக பொது நாட்குறிப்பில் பதிவு செய்தேனா என்றால் பதிவு செய்தேன். அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் தெரியாது. சம்பவ இடத்திலிருந்து காவல் நிலையம் 68 கி.மீ இருக்கும். சாட்சி மீண்டும் 25 கி.மீ தூரம் இருக்கும் என்கிறார். எதிரியை எவ்வளவு தூரத்தில் பார்த்தோம் என்றால் 600 மீட்டர் தூரத்தில் பார்த்தோம். சம்பவ இடத்திற்கே நாங்கள் போகவில்லை என்றும் பொய்யாக எதிரி மீது சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**

ELAVARASAN
Digitally signed by ELAVARASAN
Date: 2026.03.17 18:57:43 +0530

# Deposition of Witness

In the Court of the Principal District Judge, Vellore District.
S.C.No.135 of 2025
Prosecution Witness No.P.W.2 (L.W.3)

| | |
|---|---|
| Name | சிவாஜி |
| Father/Husband Name | தர்மன் |
| Calling/Occupation | வியாபாரம் |
| Age | 40 |
| Address | அணைக்கட்டு. |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 17.03.2026.

(Accused Present)

**முதல் விசாரணை**

நான் அணைக்கட்டில் வசித்து வருகிறேன். நான் வீட்டிற்கு தேவையான சமையல் பாத்திரம் வியாபாரம் செய்து வருகிறேன். அ.சா.1–ஐ தெரியும். ஆஜர் எதிரியை தெரியும். அல்லேரி மலை அடிவாரத்தில் போலிசார் என்னிடம் ஏதோ படம் வரைகிறோம் என்று சொல்லி கையொப்பம் வாங்கினார்கள். அதில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது. என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகசரில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையது. வேறு எதுவும் வழக்கு பற்றி தெரியாது.

**சாட்சியை பிறழ் சாட்சியாக குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்பட்டது.**

**கு.வி. அரசு தரப்பில்**

27.06.2022 அன்று மதியம் 02.30 மணிக்கு போலீசார் அல்லேரி ஓடையை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயாரித்தார்கள் என்றும் அதில் நான் அங்கேயே கையொப்பம் செய்தேன் என்றும் போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு எதிரியை காப்பாற்ற தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை – இல்லை.**

ELAVARASAN

Digitally signed by ELAVARASAN
Date: 2026.03.17 18:57:48 +0530

# Deposition of Witness

In the Court of the Principal District Judge, Vellore District.
S.C.No.135 of 2025
Prosecution Witness No.P.W.3 (L.W.8)

| | |
|---|---|
| Name | லெனின் |
| Father/Husband Name | செல்வதாஸ் |
| Calling/Occupation | உதவி ஆய்வாளர் |
| Age | 56 |
| Address | வேலூர். |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 17.03.2026.

(Accused Present)

**முதல் விசாரணை**

நான் தற்போது குடியாத்தம் கிராமிய காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். நான் கடந்த 27.06.2024 அன்று அணைக்கட்டு காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது காலை 06.00 மணிக்கு எனக்கு கிடைத்த இரகசிய தகவலின் பெயரில் மது விலக்கு சம்பந்தமாக போலீஸ் பார்ட்டி சகிதம் தலைமை காவலர் சந்தோஷ்குமார் மற்றும் மணிகண்டன் ஆகியோர்களுடன் பார்டி சகிதம் அல்லேரி மலை அவுசாரி ஓடையில்

மதுவிலக்கு சம்பந்தமாக கண்காணித்தபோது நன்கு ஏற்கனவே தெரிந்த பிரபு என்பவர் ஒரு பிளாஸ்டிக் கவரில் ஏதோ வைத்துக்கொண்டிருந்தார். அவரை பார்டி சகிதம் மடக்கி பிடித்தபோது அங்கிருந்தவர்கள் ஓடிவிட்டார்கள். எதிரி மட்டும் பிடிப்பட்டார் அவர் இருந்த இடத்திற்கு அருகில் நான்கு லாரி டியூப்களில் சுமார் 30 லிட்டர் வீதம் விஷ வாடையுடன் கூடிய சாராயம் இருந்தது. அவரை காரணம் கூறி காலை 07.30 மணிக்கு கைது செய்தேன்.

பொது மக்கள் சாட்சி யாரும் இல்லாததால் காவலர் இருவர் முன்னிலையில் எதிரியின் வாக்குமுலம் பதிவு செய்து எதிரி மற்றும் சாட்சிகளின் கையொப்பம் பெற்றேன். பின்னர் அதே சாட்சிகள் முன்னிலையில் காலை 09.00 மணிக்கு மகசர் தயார் செய்து நான்கு லாரி டியூப்களை கைப்பற்றினோம். இரண்டு வெள்ளை நிற கண்ணாடி பாட்டில்களில் இரசாயன பரிசோதனைக்காக தலா 500 மி.லி வீதம் எடுத்து சீல் வைக்கப்பட்டது. மீதம் இருந்த சாராயத்தை எடுத்துவர சாத்தியம் இல்லாதால் அதே இடத்தில் கொட்டி அழிக்கப்பட்டு அழித்தல் மகசர் உயர் அதிகாரிகளின் உத்தரவின்படி அழிக்கப்பட்டது.

பின்னர் எதிரி மற்றும் வழக்கு சொத்துடன் நிலையம் வந்து குற்ற எண் 124/2024, பிரிவுகள் 4(1)(i), 4(1)(aaa), 4(1-A) TNP Act r/w 328 இ.த.ச-ன் கீழ் வழக்கு பதிவு செய்தேன். **அந்த முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.3.** பின்னர் சம்பவ இடம் மதியம் 02.30 மணிக்கு

சென்று சாட்சிகள் சிவாஜி மற்றும் ராம் ஆகியோர் முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயாரித்தேன். **அந்த பார்வை மகசர் அ.த.சா.ஆ.4. வரைபடம் அ.த.சா.ஆ.5.** பின்னர் எதிரியை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தி வழக்கு சொத்தையும் அனுப்பி வைத்தேன்.

பின்னர் சாட்சிகள் சிவாஜி மற்றும் ராமு ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேலும் காவலர்கள் மணிகண்டன் மற்றும் சந்தோஷ்குமார் ஆகியோர்களை விசாரித்து வாக்குமுலம் பதிவு செய்தேன். மேலும் வழக்கினை மேல் விசாரணைக்காக ஆய்வாளரின் பார்வைக்கு வைத்தேன்.

பின்னர் நீதிமன்ற உத்தரவின்படி கைப்பற்றப்பட்ட விஷ சாராயம் கொண்ட இரண்டு கண்ணாடி பாட்டில்களை தடய அறிவியல் கூட ஆய்விற்கு உட்படுத்தி அறிக்கை பெறப்பட்டது. ஆய்வாளர் என்னை விசாரித்தார். என்னுடைய விசாரணை காவலத்தில் சாட்சிகள் வழக்கில் உள்ள கோப்பில் உள்ளவாறு என் முன்னர் வாக்குமுலம் அளித்தனர்.

### எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

வழக்கு சம்பந்தப்பட்ட அனைத்து விவரங்களும் எனக்கு தெரியும். பார்வை மகசர் என்னால் தயாரிக்கப்பட்டது. வரைபடத்தில் சட்டப்பரிவுகள் விடுப்பட்டுள்ளது என்றால் தவறுதலாக (ஹய்பன்)

சட்டப்பிரிவுகள் குறிப்பிடப்பட்டுள்ளது. அனைத்து ஆவணங்களும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றும், எதிரியிடமிருந்து எந்த பொருட்களும் கைப்பற்றப்படவில்லை என்றும் எதிரி மீது பொய் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரியை சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளோம் என்றும் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் எதிரி எந்தவிதமான ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றும், ஆஜர் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. காவல் நிலையத்திலிருந்து சம்பவ இடம் சுமார் 15 கி.மீ இருக்கும். எதிரியை பிடித்தபோது அவர் கையில் எந்த பொருளும் இல்லை.

**மறுவிசாரணை – இல்லை.**

ELAVARASAN

Digitally signed by ELAVARASAN
Date: 2026.03.17 18:57:58 +0530

# Deposition of Witness

In the Court of the Principal District Judge, Vellore District.
S.C.No.135 of 2025
Prosecution Witness No.P.W.4 (L.W.9)

| | |
|---|---|
| Name | சுப்பிரமணி |
| Father/Husband Name | சின்ன வெள்ளை |
| Calling/Occupation | காவல் ஆய்வாளர் |
| Age | 52 |
| Address | வேலூர். |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 17.03.2026.

(Accused Present)

**முதல் விசாரணை**

நான் தற்போது வேலூர் கிராமிய காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 27.06.2024 அன்று நான் பள்ளிக்கொண்டா வாட்டார காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது என் வட்டத்திற்கு உட்பட்ட அணைக்கடடு காவல் நிலைய குற்ற எண் 124/2024 வழக்கில் வழக்கை பதிவு செய்த அ.சா3 பதிவு செய்து புலன் விசாரணை நிலுவையில் இருந்த வழக்கின் கோப்பினை என் பார்வைக்கு வைத்தார். நான் இந்த வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு நீதிமன்ற உத்தரவின்படி தடய

அறிவியல் ஆய்விற்கு அனுப்பப்பட்ட விஷ வாடையுடன் கூடிய நாட்டு சாராயத்தில் 6.1 சதவீதம் அட்ரோபின் கலந்துள்ளது என்று அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதை அதை நான் பெற்றுக்கொண்டு தடய அறிவியல் அலுவலர் பாஸ்கரன் என்பவரை விசாரித்து அவரின் வாக்குமுலத்தை பதிவு செய்தேன். அவர் வழக்கிய தடய அறிவியல் ஆய்வக அறிக்கை அ.த.சா.ஆ.6.

பின்னர் ஆய்வு அறிக்கை மற்றும் என்னுடைய தனி அறிக்கையுடன் இந்த வழக்கில் மருத்துவர் பாலாஜி என்பவரிடம் ஒரு நபர் அட்ரோபின் கலந்த நாட்டு சாராயத்தை 6.1 சதவீதம் உடையதை குடித்தால் அதனால் ஏற்படும பின்விளைவுகள் குறித்து மனு கொடுத்தேன். அந்த மருத்துவர் பாலாஜி அவர்கள் அவரின் அறிக்கையில் மேற்கண்ட நாட்டு சாராயத்தை ஒரு நபர் தொடர்ந்து அருந்தினால் கண் கோளாறு, மூளை பாதிப்பு போன்ற பாதிப்புகள் ஏற்படும் என்றும் அதையை தொடர்ந்து அளவிற்கு அதிகமாக அருந்தினால் இறப்பு கூட ஏற்படலாம் என்று கருத்து தெரிவித்து மருத்துவ அறிக்கை கொடுத்தார். அந்த அறிக்கை அ.த.சா.ஆ.7.

மேலும் இந்த வழக்கில் கணினியில் தட்டச்சு செய்த காவலர் சுமித்தரா என்பவரையும் வழக்கு பதிவு செய்த உதவி ஆய்வாளர் அ.சா.3 ஐயும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் புலன் விசாரணை முடித்து ஆஜர் எதிரி மீது சட்டப்பிரிவுகள் பிரிவுகள் 4(1)(i),

4(1)(aaa), 4(1–A) TNP Act r/w 328 இ.த.ச ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். விசாரணை காலத்தில் சாட்சிகள் என் முன்பு வழக்கில் உள்ள கோப்பில் உள்ளவாறு வாக்குமூலம் அளித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

சாட்சி சுமித்ரா என்பவரின் வாக்குமுலத்தில் எதிரியின் பெயர் ராமு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான் ஆனால் அது தட்டச்சு பிழை. மாதிரியை ஆய்வகத்தில் ஒப்படைத்த காவலரை விசாரித்து வாக்குமு்லம் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். எதிரியை சொன்ன இடத்தில் சொன்ன வகையில் கைது செய்யவில்லை என்றும் கடைக்கு வந்தவரை வழியில் பிடித்து இந்த வழக்கில்எதிரியாக்கிவிட்டோம் என்றும் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றும் சொன்னவாறு எதிரி விஷ சாராயம் எதையும் வைத்திருக்கவில்லை என்றும் அதை யாருக்கும் விற்பனை செய்யவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**

ELAVARASAN Digitally signed by ELAVARASAN Date: 2026.03.17 18:58:05 +0530